ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ முற்றமூத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ முற்றமூத்து ॥

திருவதரி

‡முற்றமூத்துக் கோல் துணையா⋆ முன் அடி நோக்கி வளைந்து⋆
இற்ற கால் போல் தள்ளி மெள்ள⋆ இருந்தங்கிளையா முன்⋆
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி⋆ பெருமுலை ஊடு⋆ உயிரை
வற்ற வாங்கி உண்ட வாயான்⋆ வதரி வணங்குதுமே (1)

முதுகு பற்றிக் கைத் தலத்தால்⋆ முன் ஒரு கோல் ஊன்றி⋆
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று⋆ மேற் கிளை கொண்டிருமி⋆
இதுவென் அப்பர் மூத்த ஆறென்று⋆ இளையவர் ஏசாமுன்⋆
மதுவுண் வண்டு பண்கள் பாடும்⋆ வதரி வணங்குதுமே (2)

உறிகள் போல் மெய்ந் நரம்பெழுந்து⋆ ஊன் தளர்ந்துள்ளம் எள்கி⋆
நெறியை நோக்கிக் கண் சுழன்று⋆ நின்று நடுங்காமுன்⋆
அறிதி ஆகில் நெஞ்சம் அன்பாய்⋆ ஆயிர நாமம் சொல்லி⋆
வெறி கொள் வண்டு பண்கள் பாடும்⋆ வதரி வணங்குதுமே (3)

பீளை சோரக் கண் இடுங்கிப்⋆ பித்தெழ மூத்திருமி⋆
தாள்கள் நோவத் தம்மில் முட்டித்⋆ தள்ளி நடவாமுன்⋆
காளை ஆகிக் கன்று மேய்த்துக்⋆ குன்றெடுத்தன்று நின்றான்⋆
வாளை பாயும் தண் தடம் சூழ்⋆ வதரி வணங்குதுமே (4)

பண்டு காமர் ஆன வாறும்⋆ பாவையர் வாய் அமுதம்⋆
உண்ட வாறும் வாழ்ந்த வாறும்⋆ ஒக்க உரைத்திருமி⋆
தண்டு காலா ஊன்றி ஊன்றித்⋆ தள்ளி நடவாமுன்⋆
வண்டு பாடும் தண் துழாயான்⋆ வதரி வணங்குதுமே (5)

எய்த்த சொல்லோடீளை ஏங்கி⋆ இருமி இளைத்து⋆ உடலம்
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப்⋆ பேசி அயராமுன்⋆
அத்தன் எந்தை ஆதி மூர்த்தி⋆ ஆழ் கடலைக் கடைந்த⋆
மைத்த சோதி எம் பெருமான்⋆ வதரி வணங்குதுமே (6)

www.prapatti.com

பப்ப அப்பர் மூத்த ஆறு⋆ பாழ்ப்பது சீத் திரளை
    ஒப்ப⋆ ஐக்கள் போத உந்த⋆ உன் தமர் காண்மின் என்று⋆
செப்பு நேர் மென் கொங்கை நல்லார்⋆ தாம் சிரியாத முன்னம்⋆
    வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான்⋆ வதரி வணங்குதுமே (7)

ஈசி போமின் ஈங்கிரேன்மின்⋆ இருமி இளைத்தீர்⋆ உள்ளம்
    கூசி இட்டீர் என்று பேசும்⋆ குவளை அம் கண்ணியர் பால்⋆
நாசம் ஆன பாசம் விட்டு⋆ நல் நெறி நோக்கல் உறில்⋆
    வாசம் மல்கு தண் துழாயான்⋆ வதரி வணங்குதுமே (8)

புலன்கள் நைய மெய்யில் மூத்துப்⋆ போந்திருந்துள்ளம் எள்கி⋆
    கலங்க ஐக்கள் போத உந்திக்⋆ கண்ட பிதற்றாமுன்⋆
அலங்கல் ஆய தண் துழாய் கொண்டு⋆ ஆயிர நாமம் சொல்லி⋆
    வலங்கொள் தொண்டர் பாடி ஆடும்⋆ வதரி வணங்குதுமே (9)

‡வண்டு தண் தேன் உண்டு வாழும்⋆ வதரி நெடு மாலை⋆
    கண்டல் வேலி மங்கை வேந்தன்⋆ கலியன் ஒலி மாலை⋆
கொண்டு தொண்டர் பாடியாடக்⋆ கூடிடில் நீள் விசும்பில்⋆
    அண்டம் அல்லால் மற்றவர்க்கு⋆ ஓர் ஆட்சி அறியோமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com